*World ChristianFellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# *கலாத்தியர்*
# *பாடம் 09 சுவிசேஷத்தின் உண்மை உங்களில் நிலைத்திருக்கக்கடவது!*

***கலாத்தியர் 2:1-5, 1. பதினாலு வருஷம் சென்றபின்பு, நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்.2. நான் தேவ அறிவிப்பினாலே போய், புறஜாதிகளிடத்தில் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தேன்; ஆயினும் நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ள வர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்.3. ஆனாலும் என்னுடனேகூட இருந்த தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும் படிக்குக் கட்டாயம் பண்ணப்படவில்லை.4. கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து நம்மை நியாயப்பிரமாரணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று.5. சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி, நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை.***

*பவுல் இந்த நிரூபத்தை எழுதுவதன் நோக்கம் 5ம் வசனம் மூலம் வெளிப்படையாக தெரிகிறது!*

*பவுல் இதில் முதல் இரண்டு அதிகாரத்தில் தன்னுடைய அப்போஸ்தலத்தன்மையை உறுதிப்படுத்துகிறார், முதல் அதிகாரத்தில் நாம் பார்த்தவை*

- ✓ *அவர் மனிதனால் அனுப்படவில்லை,*
- ✓ *அவர் மனுஷர் மூலமாய் அனுப்பப்படவில்லை,*
- ✓ *அவர் மனிதர் மூலம் கற்றுக்கொள்ளவில்லை,*
- ✓ *அவர் இயேசு மற்றும் பிதாவாகிய தேவன் மூலம் அனுப்பப்பட்டார்,*
- ✓ *சுவிசேஷத்தின் வெளிப்பாடு அவருக்கு இயேசு கிறிஸ்து மூலம் நேரிடையாக கிடைத்தது*
- ✓ *அவர் பெற்ற சுவிசேஷம் உண்மையானதே,*
- ✓ *மற்ற சுவிசேஷத்தை நீங்கள் விசுவாசித்தால் நீங்கள் சபிக்கப்படுவீர்கள்,*
- ✓ *யாராவது வேறு ஏதாவது சுவிசேஷத்தை பிரசங்கித்தால் அவர்கள் சபிக்கப்படுவார்கள், மற்றும்*
- ✓ *தேவன் பவுலின் வாழ்க்கையினால் மகிமைப்பட்டார்.*

*இதை தெளிவுபடுத்த அவருடைய பழைய வாழ்க்கை, அவர் மனம் மாறியது, மற்றும் மாறின பிறகு அவருடைய வாழ்க்கை எப்படி இருந்தது என எல்லா விஷயங்களையும் பற்றி நீண்ட விளக்கம் அளிக்கிறார் அதை உறுதிப்படுத்த.*

***வசனம்1, பதினாலு வருஷம் சென்றபின்பு, நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்***

***பவுல் 14 வருடங்களுக்கு பிறகு எருசலேம் போகவேண்டிய நோக்கம் என்ன****?*

*தமஸ்கு சாலையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சந்தித்த பிறகு, அரபி தேசத்திற்கு மூன்று வருடங்கள் சென்றார் மற்றும் பின்னர் சுருக்கமாக 15 நாட்கள் மேற்பார்வையிட சென்றார். அப்போஸ்தலர்கள் பவுலின் உயிரைப் பற்றி பயந்து அவரை தர்சுவுக்கு அனுப்பி வைத்தார்கள். பர்னபா அவரை*

*அந்தியோகியாவுக்குக் கொண்டு சென்றார், அங்கு அவர் தேவாலயத்தை நிர்வகித்தார்.*

***கலாத்தியர் 1:21, 23-24,***
***21பின்பு, சீரியா சிலிசியா நாடுகளின் புறங்களில் வந்தேன்.23. முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறானென்பதை மாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து,24. என்னைப்பற்றி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.***

*பவுல் பர்னபாவுடன் வேலை செய்து, சிரியா மற்றும் சிலிசியா ஆகிய இடங்களில் சபைகளை நிறுவினார். அந்தியோகியாவில் ஒரு சபையை நிறுவினர் அதுதான் இரண்டாம் சபை – கி.பி.44ல் ஏரோது அகரிப்பா இறந்த காலத்தில் தான் சீரியாவில் உள்ள அந்தியோகியாவில் நிறுவப்பட்டது இதை பவுல் பர்னபாவுடன் இனைந்து செயல் ஆற்றினார். அப்போஸ்தலர் 11 மற்றும் 12 ல் இதை நாம் காணலாம். பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட எருசலேமிலும் யூதேயாவிலும் உள்ள விசுவாசிகளுக்கு அது ஆறுதலாக அமைந்தது.*

*எருசலேமில் நிவாரணப் பொருள்களை அளித்தபின், பின்பு அவர் அந்தியோகியாவுக்குச் சென்றார். அதன் பிறகு அவர் முதல் மிஷனரி பயணம் சென்றார். அந்த முதல் களப்பயணத்திலிருந்து திரும்பி, அந்தியோகியாவில் தங்கி இருந்தார். கடைசியாக 14 ஆண்டுகளுக்கு பிறகு எருசலேமிற்கு செல்கிறார், அங்குள்ள பரிசுத்தவான்களுக்கு நிதி உதவி பொருட்கள் அளிக்க சென்றார்.*
*லூக்காவால் பதிவு செய்யப்பட்டதில் பவுலின் இந்த பயணம் அவர் ஊழியத்தில் 14 வருடங்களுக்கு பிறகு நடக்கிறது இதை அப்போஸ்தலர் 15 ல் காணலாம்.*

*அவர் எருசலேமில் இருந்தபோது, எருசலேமிலிருந்து சிலர் அங்கு வந்தார்கள், பவுல் முழு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை என்று பரப்பினார்கள். இரட்சிக்கப்பட நீங்கள் விசுவாசம் வைத்தால் மட்டும் போதாது, நீங்கள் விருத்தசேதனம் மற்றும் மோசேயினால் கற்பிக்கப்பட்ட சடங்குகள் நியாயப்பிரமணங்கள் அனைத்தும் பின்பற்ற வேண்டும் என்றனர்.*

***அப்போஸ்தலர் 15:1, சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதன மடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்."***

*ஆகையால் இங்கே யூதர்கள் அந்தியோகியாவுக்கு வந்து, புறஜாதியார் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும் இல்லையென்றால் இரட்சிக்கப்பட முடியாது என்று கூறுவதை காணமுடியும்.*

***அப்போஸ்தலர் 15:2-5, 2. அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறுசிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.3. அந்தப்படி அவர்கள் சபையாரால் வழிவிட்டனுப்பப்பட்டு, பெனிக்கே சமாரியா நாடுகளின் வழியாய்ப் போய், புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்து, சகோதரர் எல்லாருக்கும் இந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்கள்.4. அவர்கள் எருசலேமுக்கு வந்து, சபையாராலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளை***

***யெல்லாம் அறிவித்தார்கள்.5. அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை விருத்தசேதனம்பண்ணுகிறதும் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள்."***

***விவாதம் நடைபெறுகிறது!***

***அப்போஸ்தலர் 15:6, அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனைபண்ணும்படி கூடினார்கள்.***

*அந்தியோகியாவில் சில யூத மதவாதிகள் அதாவது ஜுடேசர்ஸ் வந்து கள்ள சுவிசேஷத்தை பரப்பினர். பவுல் பர்னபாவும் இதை அவர்கள் முகத்திற்கு நேராக எதிர்கொண்டனர், அதனால் அங்கு சில குழப்பம் ஏற்பட்டது. இந்தச் சிக்கலைத் தீர்த்து வைக்க அவர்களுக்கு உதவுவதற்காக பவுல் மற்றும் பர்னபாவுடன் சிலரை எருசலேமுக்கு சபையார் அனுப்புகிறார்கள்.*

***வசனம் 2, நான் தேவ அறிவிப்பினாலே போய், புறஜாதிகளிடத்தில் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தேன்; ஆயினும் நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ள வர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்***

*இது அவருக்கு ஏற்பட்ட வெளிப்படுத்துதலால் நடந்தது.
பவுல் இன்னும் தேவனிடமிருந்து நேரிடையாக வெளிப்பாடுகளை பெறுகிறார்.*

*தேவனிடமிருந்து நேரிடையாக தமஸ்கு செல்லும் வழியில் வெளிப்பாடுகளை பெற்றார்.*

*அனனியாவின் வீட்டில் நேரிடையாக வெளிப்பாட்டை பெற்றார்.*

*அரபி தேசத்தில் நேரிடையாக வெளிப்பாடுகளை பெற்றார்.*

*அவரின் 14 வருட ஊழிய காலத்தில் தேவனிடமிருந்து நேரிடையாக வெளிப்பாடுகளை பெற்றார்.*

*இப்பொழுது அவருக்கு பரலோகத்திலிருந்து நேரிடையாக இனொரு வெளிப்பாடு கிடைக்கப்போகிறது அதற்குதான் எருசலேமிற்கு செல்கிறார்.*

***ஒரு தொடர்ச்சியான மற்றும் அடுத்தடுத்து வெளிப்பாடுகளை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனிடமிருந்து அவரின் வார்த்தை மூலம் பெற்றுக்கொண்டே இருக்க வேண்டும்***

*இல்லையெனில் நீங்கள் தேவனை அறியும் அறிவில் அப்படியே நின்று விடுவீர்கள்.*

*எருசலேம் திருச்சபையின் வாழ்க்கையில் ஒரு முக்கிய மையமாக இருந்தது. பவுல் தன்னுடைய சுவிசேஷத்தை குறித்து எந்த கேள்வியும் கேட்கவில்லை, அவர் தேவன் மூலம் அனுப்பபட்டிருந்தார். பவுலுக்கு தான் முதலில் வெளிப்பாடு வந்திருக்கலாம். சபையில் உள்ள பவுலோடு இருந்த தலைவர்களுக்கும் வந்து இருக்கலாம். அனால் அவர்கள் எல்லோரும் அவர் எருசலேமிற்கு அனுப்பப்படுவது நிச்சயம் என்று ஒப்புக்கொண்டனர். இப்படிதான் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்தார்.*

***அப்போஸ்தலர் 13:2-3, 2. அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். 3. அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.***

*பவுலையும் பர்னபாவையும் பரிசுத்த ஆவியானவர் அவர்களின் முதல் (மிஷனரி) களப்பயணத்திலேயே பிரித்தது ஒரு நேரிடை வெளிப்பாடு ஆகும். இப்படிதான் ஆதி சபையும் அப்போஸ்தலர்களும் நேரிடையான வெளிப்பாடுகளோடு செயல்பட்டனர்.*

*எனவே பவுலிற்கு இந்த வெளிப்பாடு கிடைக்கிறது, சபையும் அதை உறுதி படுத்தியது, அவர் எருசலேமை நோக்கி செல்கிறார் அங்க உள்ள சிக்கலான சூழ்நிலைமையில் உதவி செய்ய.*

***வசனம் 2, "நான் தேவ அறிவிப்பினாலே போய், புறஜாதிகளிடத்தில் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தேன்."***

*அப்போஸ்தலர் 15 ல் சொல்லப்பட்ட எருசலேம் சபையை குறிப்பிட்டது போல் இங்கேயும் அவர் "அவர்களுக்கு" என்று குறிப்பிடுகிறார்.*

*தேவன் பிரச்சனைகளை அறிந்திருந்தார்.*
*தேவன் விருத்தசேதனம் செய்ய வற்புறுத்தும் குழுவை அறிந்திருந்தார்.*

*யூத மதவாதிகள் ஒரு மிகப்பெரிய சேதத்தை அவர்களின் கட்டாய விருத்தசேதனம் மற்றும் நியாய கோட்பாடுகள் மூலம் ஏற்படுத்துவதை தேவன் அறிந்து இருந்தார்.*

*ஆகவே பவுலும் பர்னபாவும் தான் சுவிசேஷத்தை தெளிவுபடுத்துவதற்காக தேவனால் பயன்படுத்தப்பட கூடிய சரியான நபர்கள்.*

*பவுல் அங்கு வந்து செய்கிற முதல் காரியம் தான் பிரசங்கம் பண்ணி வரும் சுவிசேஷத்தை அவர்களிடம் ஒப்படைப்பதே.*

***வசனம் 2, ஆயினும் நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்***

*தலைவர்களுக்கு புகழ் தரும் விதமாக காலத்தியர் 2ம் அதிகாரம் 9ம் வசனத்தில் அப்போஸ்தலர்கள் பெயர்களை குறிப்பிடுகிறார்.*

***கலாத்தியர் 2:9, எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும், தாங்கள் விருத்தசேதனமுள்ளவர் களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி, அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்து***

*யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகியோர் தூண்களாக இருந்தனர்.*

*இயேசுவை விசுவாசித்திருந்த யூத மதவாதிகள் தங்களுடைய யூத முறைமைகளையும் பின்பற்றியபடியால் அவர்களுக்கு*

ஆவிக்குரிய பெருமை வந்துவிட்டது. இதனால் அவர்கள் பவுலை இழிவாக நினைத்தனர்.

பவுல் அவர்களின் அங்கீகாரத்தை எதிர்பார்க்கவில்லை, இயேசு கிறிஸ்து அவருக்கு அளித்த வெளிப்பாடுகளை அவர் போதிப்பதன் மூலம் அவர்கள் உறுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றே விரும்பினார்.

நாம் பார்த்தவரையில் தேவன் அவருக்கு கொடுத்த சத்தியத்தை சுவிஷேசத்தை அவர் கொஞ்சமும் சந்தேகப்படவில்லை என்பதை காண முடிகிறது.

பவுல் சொல்லுகிறார்,
நான் அதை அவரின் உதடுகளினால் கேட்டேன்.
அவரின் வல்லமையை நான் சந்தேகித்தது இல்லை.
நான் பதினான்கு ஆண்டுகளாக பார்த்துக்கொண்டு வருகிறேன்.
என் முழு வாழ்விலும் பார்த்து உள்ளேன்.

கலாத்தியரின் முதலாம் அதிகாரத்தில் அதை தான் முழுமையாக எடுத்து உரைக்கிறார்.

சபையை துன்பப்படுத்தியவர் இப்பொழுது அதை பிரசங்கிக்கிறார்.

சுவிசேஷத்தின் வல்லமை எனக்கு தெரியும், அதன் உண்மை எனக்கு தெரியும், ஆனால் எனக்கு அப்போஸ்தலர்களின் ஒப்புதல் வேண்டும். நான் தேவனிடமிருந்து காரியங்களை பெற்றுக்கொண்டேன் அதை அப்போஸ்தலர்களும் ஒப்புக்கொண்டதை நீங்கள் அறிய விரும்புகிறேன். அவர்களின் ஒப்புதல் பெறவே நான் வந்தேன்.'' ஒப்புதல்

*உடனே கிடைத்துவிட்டது. அது மிக துரிதமாகவே கிடைத்துவிட்டது.*

***வசனம் 3, ஆனாலும் என்னுடனேகூட இருந்த தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும் படிக்குக் கட்டாயம்பண்ணப்படவில்லை.***

*இதுவரை பவுல் இறையியல் கோட்பாடுகளை நியாயப்படுத்த முயன்றார் அவைகள் இப்போது நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் காட்ட அவர் இன்னும் ஒரு படி மேலே செல்கிறார்.*

## ***தீத்து,***

***தீத்து 1:1, தேவனுடைய ஊழியக்காரனும் இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது:***

*தீத்து ஒரு கிரேக்க புறஜாதியான்!*
***அவரின் வாழ்க்கை விளக்கம்.***

*தீத்து, விசுவாசியாக மாறினார், பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டார், பவுல் மற்றும் பர்னபாவின் உடன் ஊழியக்காரன்.*

*தீத்து மீட்கப்பட்டு ஆவியானவரால் நடத்தப்பட்டு விருத்தசேதனம் பெறாமல் வாழ்ந்துவரும் ஒரு புறஜாதியாவார், மற்றும் அவர் மூதாதையர் மற்றும் மோசேயின் மரபுகள் நியாயப்பிரமணங்களை பின்பற்றாதவர்.*

*அவரை அப்போஸ்தலர்கள் என்ன பண்ணினார்கள்?*

அவர் விருத்தசேதனம் பெறும்படி அவர்களால் வற்புறுத்தப்பட்டாரா?
அவர் மோசேயின் பிரமாணங்களை கைக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டாரா?

ஏனென்றால் அவர்கள் என்னவெல்லாம் தீத்துவுக்கு செய்தார்களோ அது தான் இந்த பிரச்சனைகளுக்கு பதிலாக அமையும்.

- அங்கே தீத்து விருத்தசேதனம் பண்ணப்பட்டிருப்பாரானால் யூத மதவாதிகள் போதித்தது சரியே.
- அவர்கள் தீத்துவை ஏற்றுக்கொண்டு அனால் அவரை விருத்தசேதனமும் யூத முறைமைகளையும் பின்பற்ற வற்புறுத்தவில்லை என்றால் நான் உபதேசிப்பது அவர்களால் ஏற்றுக்கொள்ள படவேண்டும்.

அதனால் தான் பவுல் காலத்தியருக்கு சொல்லுகிறார், "ஆனாலும் என்னுடனேகூட இருந்த தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும் படிக்குக் கட்டாயம்பண்ணப்படவில்லை."

இது யூத மதவாதிகளுக்கு மிகப்பெரிய சரிவு. அந்த ஜுடேசர்கள் தங்களின் கோட்பாடுகள் அப்போஸ்தலர்களால் நியாப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தனர் அனால் அது நடக்கவில்லை.

எருசலேமில் உள்ள யூத அப்போஸ்தலர்கள் இந்த புறஜாதியார் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்ற தேவை இல்லை என்பார்களானால், உலகம் முழுவதும் உள்ள புறஜாதியார் இதை பின்பற்ற வேண்டும் என்று இந்த யூத மதவாதிகள் எப்படி வற்புறுத்த முடியும்?

*உடனே உங்கள் சிந்தனைகளில் என்ன தோன்றும் என நான் அறிவேன்.*

*அப்போஸ்தலனாகிய பவுல் மூலமாக இரட்சிக்கப்பட்ட பிறகு தீமோத்தேயு விருத்தசேதனம் செய்யப்படவில்லையா?*

***அப்போஸ்தலர் 16:1-3, அதன்பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன்.2. அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான்.3. அவனைப் பவுல் தன்னுடனே கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று விரும்பி, அவனுடைய தகப்பன் கிரேக்கன் என்று அவ்விடங்களிலிருக்கும் யூதர்களெல்லாம் அறிந்திருந்தபடியால், அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான்.***

*தீமோத்தேயுவின் தாய் யூதராவார்.*
*தீமோத்தேயுவின் தந்தை ஒரு புறஜாதியார்.*
*இவை எல்லாம் இருந்தாலும் அவர் தாயார் மூலமாய் இரத்த சமந்த முறையில் யூதராக கருதப்படுவார்.*

- *பவுலிற்கு ஒரு துணை அல்லது உடன் ஊழியக்காரன் தேவைப்பட்டார்.*
- *தீமோத்தேயு அவருக்கு நல்ல உடன் ஊழியக்காரன், உறுதுணையாக இருக்க போகிறார்.*
- *தீமோத்தேயு அவருக்கு உடன் ஊழியக்காரன் மட்டும் அல்ல, ஆனால் பவுலினால் கொடுக்கப்பட்ட சுவிசேஷத்தை அடுத்த வருகின்ற தலைமுறைக்கு கொண்டு செல்லும் பணி தீமோத்தேயுவுக்கு உள்ளது.*

*பவுல் கள ஊழிய பயணத்திற்கு செல்லும் போது எங்கு போவார் என்று நினைவில் கொள்ளுங்கள்?*

*எந்த பட்டணத்திற்கு பவுல் சென்றாலும், முதலில் அவர் தேவாலயத்திற்கு செல்வார், அங்கு சிலரை தேவனிடமாக வழி நடத்தும் படி மாற்றுவார் உடனே அங்குள்ளோரால் நிராகரிக்கப்படுவார். பிறகு அவர் புறஜாதியாரிடம் சென்று அங்கு சபையை ஸ்தாபிப்பார்.*

*ஏனென்றால் புறஜாதியார் யாரும் தேவாலயத்திற்குள் செல்லக்கூடாது!*

*பழைய ஏற்பாட்டில் உள்ள தேவாலயத்தில் புறஜாதியருக்கு என்று வெளிப்புறமாக ஒரு பகுதி கட்டப்பட்டு இருக்கும் அதை நினைவில் கொள்ளுங்கள்.*

*யூதர்களுக்கு என்று நியமிக்கப்பட்ட இடத்தில் புறஜாதியார் செல்லக்கூடாது.*

*அதனால் தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டிய அவசியம் இருந்தது!*

*ஏனென்றால் அவரும் யூதனாக கருதப்பட்ட படியால் பவுல் செல்லும் இடமெல்லாம் தீமோத்தேயுவும் கூட செல்ல முடியும்.*

*அந்த விருத்தசேதனம் அவரின் ஆவிக்குரிய வாழ்விற்கு எந்த உதவியும் செய்யவில்லை, அவரின் இரட்சிப்பிற்கும் எந்த வழியும் வகுக்கவில்லை. யூதர்கள் செல்லும் அதிகாரம் உள்ள இடங்களுக்கு பவுலுடன் இவரும் செல்லும்படியாகவே இது செய்யப்பட்டது.*

*ஆனால் தீத்து ஒரு புறஜாதியான்.*

*இங்கு நாம் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள முடியும், தலைவர்கள் அப்போஸ்தலர்களாகிய யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகியோர் பவுல் மற்றும் பர்னபாவின் நிலையை ஒப்புக்கொண்டனர்.*

- ✓ *இரட்சிப்பிற்கு விருத்தசேதனம் அவசியம் இல்லை,*
- ✓ *சடங்குகள் தேவை இல்லை,*
- ✓ *சம்பிரதாயங்கள் தேவையில்லை மற்றும்*
- ✓ *வெளியரங்கமான விழாக்கள் கொண்டாடுதல் தேவையில்லை.*

*இந்த காலத்திற்கு ஏற்றார் போல் சொல்ல வேண்டுமானால் இரட்சிக்கப்படுவதற்கு முன் ஞானஸ்நானமும் திருவிருந்தும் அவசியம் என சொல்லமால் இரட்சிப்பிற்கு பின் நடைபெறவேண்டியது என சொல்லிக்கொண்டே போகலாம்.,*

*அப்போஸ்தலர்கள் தீத்துவை விருத்தசேதனம் பண்ண சொல்லி இருந்தால் அது கிருபையின் சுவிசேஷத்தை நிராகரித்து பொய்யான சுவிசேஷத்தை அங்கீகரிப்பது போல் ஆகிவிடும்.*

***அப்போஸ்தலர் 15:6-12, 6. அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனைபண்ணும்படி கூடினார்கள். 7. மிகுந்த தர்க்கம் உண்டானபோது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: சகோதரரே நீங்கள் அறிந்திருக்கிறபடி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்துகொண்டார். 8. இருதயங்களை அறிந்திருக்கிற தேவன்***

***நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்துச் சாட்சிகொடுத்தார்;9. விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்.***
***10. இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?***
***11. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான்.***
***12. அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் அமர்ந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்களைக்கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லக்கேட்டார்கள்***.

*அப்போஸ்தலர் 10ல், நூற்றுக்கு அதிபதி கொர்நேலியுவை எப்படி சுவிசேஷத்தின் பாதையில் நடத்தினார், மற்றும் அவரின் வீட்டில் கூடியிருந்த புறஜாதியாரை எப்படி சுவிஷேஷத்தில் வழிநடத்தினார் என நினைவுகூருகிறார்.*

*பர்னபாவும் பவுலும் தேவன் அவர்கள் மூலமாய் புறஜாதியாரிடத்தில் நடத்திய அற்புதங்களையும் அடையாளங்களையும் வெளிப்படுத்திக்காட்டுகிறார்.*

*எருசலேமில் உள்ள ஆலோசனை சங்கம் கூறுகிறது,*
*விருத்தசேதனம் தேவையில்லை என்று.*
*கிரியைகள் தேவையில்லை,*
*விழாக்கள் தேவையில்லை,*
*இரட்சிப்புக்கு பாரம்பரியம் அவசியம் இல்லை.*

*புறஜாதியார் யூதர்கள் இரட்சிக்கப்பட்டது போலவே தான் இரட்சிக்கப்பட்டனர், விசுவாசத்தினால் மட்டுமே கிரியைகள் மூலம் அல்ல.*

*நாம் அப்போஸ்தலர் 15 ம் அதிகாரம் வாசிக்கும் போது அங்கு ஒரு கடிதத்தை வடிவமைக்கின்றனர். அவர்கள் வடிவமைத்த கடிதம் இவ்வாறு கூறுகிறது, "யூதர்களை தாக்குவதே நோக்கமாக கொள்ளாமல், விசுவாச சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் ஜாக்கிரதையாய் இருங்கள்."*

*யூதர்கள் தங்கள் கருத்துக்களை எழுப்பினார்கள், அப்போஸ்தலர்கள் கண்டனம் செய்தார்கள்.*

***வசனம்4, கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து நம்மை நியாயப் பிரமாரணத்திற்கு அடிமைகளாக்கும்பொருட்டாகப் பக்க வழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று.***

*இவை எல்லாவற்றிக்கும் முக்கிய காரணம் கள்ள சகோதரர்கள் பக்கவழியாய் சாத்தானால் நுழைந்ததே, இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் என்ற போர்வையை போர்த்திக்கொண்டு வந்தனர்.*

*அவர்கள் நாம் கிறிஸ்துவுக்குள் பெற்ற சுதந்திரம், விடுதலை போன்றவற்றை உளவு பார்க்க வந்து நம்மை அடிமைத்தனத்திற்கு ஆளாக்க முற்பட்டனர்.*

*அவர்கள் ரகசியமாக சாத்தானால் கொண்டுவரப்பட்டனர்.*
*அவர்கள் சபைக்குள் வந்தனர்.*
*அவர்கள் உண்மையைக் கெடுக்கும்படி வந்தார்கள்.*
*அவர்கள் களைகளை விதைக்க வந்தனர்.*
*அவர்கள் இரகசியமாக வந்தனர்.*

*அவர்கள் நியாயப்பிரமாணம் மூலம் சுதந்தரத்தை கெடுக்க வந்தனர்.*

*நம்முடைய கர்த்தராகிய இயேசு ஒரு அற்புதமான உவமையின் மூலம் இதைக் கற்பித்தார் மத்தேயு 13ல். நாம் அதை இப்பொழுது விரிவாக பார்க்க போவது இல்லை, எனவே சுருக்கமாக காண்போம்.*

***மத்தேயு 13: 24-30 ல் உவமை சொல்லப்பட்டுள்ளது***

***மத்தேயு 13:36-43 ல் அதற்கான விளக்கம் சொல்லப்பட்டுள்ளது***
***36. அப்பொழுது இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குப்போனார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, நிலத்தின் களைகளைப்பற்றிய உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டார்கள். 37. அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்.38. நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்;***
***39. அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். 40. ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.***
***41. மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து,***
***42. அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். 43. அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்.!***

| **விளக்கம்** | **அர்த்தம்** |
|---|---|
| நிலம் | உலகம் |
| நல்ல விதை | வேதவசனம் |
| விதைப்பவர் | மனுஷ குமாரன் |
| களைகள் | விதைப்பவன்: சாத்தான் |
| கோதுமை | ராஜ்யத்தின் புத்திரர் |
| களைகள் | பிசாசின் ஆட்கள் |
| அறுவடை | கடைசி நாட்கள் |
| அறுப்பவர்கள் | தூதர்கள் |
| அறுத்தவை | சேர்த்து அக்கினியில் போடப்பட்டது |
| கோதுமை | சூரியனை போல் ராஜ்யத்தில் நிலைப்பது |

## விடுதலை:

- ✓ சட்டங்களிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரம் பெற்றோம்,
- ✓ சட்டங்களிலிருந்து விடுதலை, அதை மீறும்போது தண்டனை மற்றும் ஆக்கினைக்குட்படுவதிலிருந்து விடுதலை,
- ✓ பழைய ஏற்பாட்டு சட்டங்களான வெளியரங்கமான விழாக்களிலிருந்து விடுதலை,
- ✓ யூத மரபுகளிடமிருந்து இருந்து சுதந்திரம்,
- ✓ அன்பு இல்லாமல் சுத்திகரிப்பு என்ற பெயரில் கிரியைகளிலிருந்து விடுதலை.
- ✓ கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள் விடுதலையாய் இருக்கிறான்!
- ✓ எல்லாவிதமான வெளிப்புறமாக விழாக்கள் மற்றும் சடங்குகளிலிருந்து விடுதலை.

*2 கொரிந்தியர் 3:17,*
***கர்த்தரே** ஆவியானவர்; **கர்த்தருடைய** ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.*

***வசனம் 4, நம்மை நியாயப்பிரமாரணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப்***

*நாம் கிறிஸ்துவுக்குள் விடுதலையாய் இருப்பதை அவர்கள் அடிமைக்குள்ளாக்க நினைக்கிறார்கள்.*

***வசனம் 5, சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி, நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை***

*பவுல் சொல்லுகிறார், "சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி, நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை," அதாவது ஒரு சந்தர்பத்திலாகிலும் என்கிறார்.*

*ஏன்?*
***சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்.***

*தன்னுடைய சபையின் மேல் ஒரு போதகரின் என்ன ஒரு அறிக்கை?*

*நீங்கள் சுவிசேஷத்தைப் பற்றி குழப்பமடைந்திருந்தால், நீங்கள் உண்மையான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியாது. உண்மையான சுவிசேஷத்தைப் பற்றி அறியாமை இருந்தால், அதன் விளைவாக அவர்கள் உண்மையான சுவிசேஷத்தை அறிவிக்க முடியாது.*

*சபை அதன் நோக்கத்தில் ஒரு குறுகிய எண்ணம் கொண்டதாக ஆகிவிடும்.*

## *முடிவுரை:*

*என்னுடைய ஜெபம், ஆசை என எல்லாமே உங்களில் சுவிசேஷம் நிலைத்திருக்க வேண்டும் என்பதே.*

*பவுல் எபேசுவில் இருக்கும் போது சொல்லுகிறார்,*
***அப்போஸ்தலர் 20:29- 32, நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். 30. உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.31. ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள். 32. இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாகப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.***

*மூன்று ஆண்டுகளாக நான் கண்ணீரோடு உங்களை எச்சரிக்காமல் இருக்கவில்லை, நான் சென்ற பிறகு, பொய்யான காரியங்கள் வந்துவிடும்.*

*அவர்கள் உள்ளே வருவார்கள், வெளியிலிருந்து வருவார்கள், அவர்கள் உங்களைச் சீர்குலைத்து, சுவிசேஷத்தைத் திருடுவதற்குத் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்வார்கள்.*

*நீங்கள் சுவிசேஷத்தில் நிலைத்திராதபடி அவர்கள் உண்மையை குழப்பி விடுவார்கள்.*
*நீங்கள் சத்தியத்தில் தெளிவாக இருக்கமாட்டிர்கள், உலகில் உங்களின் பணியானது முழுமை அடைவதில் சந்தேகம் ஆகிவிடும்.*
*கள்ள போதகர்கள் எங்கும் உள்ளனர்.*

*தேவனின் ராஜ்யத்திற்கு வருபவர்கள் எல்லோரையும் புதிய ஏற்பாட்டில் போராளி அல்லது வீரன் குறிப்பிடப்பட்டு உள்ளது.*
*அவர் கண்டிப்பாக*

- ✓ *சுவிசேஷத்தை காக்க வேண்டும்,*
- ✓ *தேவனுடைய வார்த்தையை காக்க வேண்டும்,*
- ✓ *சத்தியத்தை காக்க வேண்டும்.*

*பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது ஒரு இளம் போதகர் போல கள்ள போதகர்களை குறித்து அவரை எச்சரித்து எழுதுகிறார்.*

*அவர் தீத்துவக்கு எழுதும் போதும் கள்ள போதகர்களை குறித்து எச்சரிக்கிறார்.*

---

*எல்லா போதகர்களும் தலைவர்களும் தவறான போதனைக்கு எதிர்த்து நிற்க வேண்டும்! ஒரு போதகருக்கு இதுவே குறைந்த பட்ச தகுதியாகும்.*

---

*அவர்களால் பண்ண முடியும் என்று அல்ல, அவர் பண்ணித்தான் ஆகவேண்டும்.*

*சாத்தானும் அவன் கூட்டாளிகளும் ஒளியின் தூதன் வேஷத்தை தரித்துக்கொண்டன, அனால் அவைகள் நரகத்திலிருந்து வந்தவை. அவைகள் அந்தகாரத்தின் தூதர்கள்.*

*அப்போஸ்தலனாகிய பவுல் உண்மையைப் பாதுகாப்பதற்கான ஒரு முன்மாதிரியை நமக்கு கொடுத்து இருக்கிறார்!*

*யூத மதவாதிகள் ஜுடேசர்ஸ்க்கு இரட்சிப்பின் சுவிசேஷத்தை களங்கப்படுத்த முயற்சித்த போது அவர்களின் முகத்திற்கு எதிராகவே உண்மையான சுவிசேஷத்தை காக்க பவுல் போராடினர்!*

*நீங்களும் செய்வீர்களா?*